# பானகம் அருந்தும் மகா விஷ்ணு

## சாந்திப்பிரியா



ஆந்திராவில் விஜயவாடாவிற்கும் குண்டூருக்கும் இடையில் உள்ள மங்களகிரி எனும் ஊரில் எந்த ஒரு உருவமும் இல்லாமல் வாயை மட்டும்

திறந்து காட்டுவது போல பகவான் விஷ்ணுவின் அவதாரமான பகவான் நரசிம்மர் ஒரு மலையின் குகைப் பகுதியில் காணப்படுகின்றார். மலையடிவாரத்தில் அமைந்துள்ள இந்த ஆலயத்தை 'பனகல நரசிம்ம சுவாமி ஆலயம் ' என்று அழைக்கின்றார்கள். இங்கேதான் பகவான் நரசிம்மர் கண்களுக்கு தெரியாத உருவில் இருக்கிறார் என்று கூறுகின்றார்கள். இங்குள்ள கடவுளுக்கு முகம், காய் கால்கள் போன்ற எந்த ஒரு உருவமும் இல்லை. திறந்துள்ள வாய் பகுதி மட்டுமே உள்ளது என்பதினால் வாயை திறந்தபடி காட்சி அளிக்கும் வகையில் பித்தளையினால் செய்யப்பட்டு உள்ள கவசம் அணிவிக்கப்பட்டு உள்ளது. மங்கள கிரி என்ற சிறிய ஊரின் மக்கள் தொகையில் பாதிக்கும் மேல் நெசவாளர்கள் உள்ளனர். அந்த ஆலயத்திற்குப் பின்புறம் உள்ள பகுதியில் இலஷ்மி தேவியின் ஆலயம் உள்ளது. மலைக்கு கீழ் பகுதியில் இலஷ்மி நரசிம்மஸ்வாமி ஆலயம் ஒன்றும் உள்ளது. இந்த ஆலயத்தில் நரசிம்ம அவதாரத்தை ஒட்டிய அதாவது பாதி மிருகம் பாதி கடவுள் முகத்தில் தோற்றம் தரும் வகையிலான லஷ்மி நரசிம்மர் சிலை கல்லில் செய்யப்பட்டு, 108 சாலிக்கிராமத்தினால் கட்டப்பட்ட மாலையை அணிந்துள்ள கோலத்தில் உள்ளது. அதனால் அந்தக் கோலம் மிகவும் விசேஷமாகக் கருதப்படுகின்றது. சுமார் 200 முதல் 250 ஆண்டுகள் முன்பு அமராவதியை ஆண்டு வந்த ஒரு மன்னன் 150 அடிக்கும் மேல் உள்ள ஒரு கோபுரத்தை அந்த ஆலயத்திற்கு கட்டினார். 18 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கூறப்படும் இந்த ஆலயத்தில் உள்ள மூல சிலையை நிறுவியவர் பாண்டவர்களில் மூத்தவரான யுதிஷ்டர் என்ற நம்பிக்கையும் உள்ளது.

மங்களகிரி என்றால் மங்களம் தரும் இடம் என்று பெயர். மகாலஷ்மி தேவி இங்கு வந்து தபம் செய்ததினால் மங்களம் தரும் இடமாகக் இது கருதப்பட்டது. வைஷ்ணவர்களின் எட்டு புனித

தீர்த்தங்களில் இதுவும் ஒன்று. யானையைப் போல தோற்றம் தரும் இந்த மலைப் பற்றி கூறப்படும் ஒரு கதையின்படி, முன் ஒரு காலத்தில் பரியாத்திரா என்ற மன்னனின் மகனான ஹஷ்வ சுருங்கி என்ற இளவரசன் தனக்கு இருந்த அகோரத் தோற்றம் கொண்ட உடல் மாற வேண்டும் என பகவான் விஷ்ணுவை வேண்டிக் கொண்டு அந்த மலைப் பகுதியில் வந்து தவம் இருந்தான். அவன் குணமடைந்ததும் தன்னுடைய இராஜ்யத்திற்குத் திரும்ப செல்ல மனமின்றி பகவான் விஷ்ணுவை சுமக்கும் வாகனமாக இருக்க எண்ணி, தன்னை ஒரு யானைத் தோற்றத்தில் காணப்படும் மலையாக உருமாற்றிக் கொண்டு அங்கு அமர்ந்து விட்டானாம். ஆகவே அந்த மலையும் யானைத் தோற்றத்தில் உள்ளதாம்.

அந்த ஆலயத்திற்கு ஏன் பகவான் நரசிம்மஸ்வாமி என்ற பெயர் ஏற்பட்டது? அதன் கதை இது. கிருதேயுகத்தில் ஒருமுறை நாமுச்சி என்ற அரக்கன் இருந்தான். அந்த அரக்கன் பகவான் பிரும்மாவிடம் இருந்து ஒரு அறிய வரம் பெற்று இருந்தான். அந்த வரத்தின்படி அவனுக்கு உலர்ந்த அல்லது ஈரத்திலான எந்த பொருளினாலும் மரணம் ஏற்படாது என்பதினால் அனைவரையும் துன்புறுத்தி வந்தான். அவன் இந்திரனையும் விட்டு வைக்கவில்லை. எல்லை மீறிப் போன அவன் தொல்லையைத் தாங்க முடியாமல் போன பகவான் இந்திரன் பகவான் மகாவிஷ்ணுவிடம் அவன் தொல்லைப் பற்றிக் கூற அவனை அழிக்க அவனுக்கு தன்னுடைய சுதர்சன சக்கரத்தைக் கொடுத்தார். பகவான் இந்திரனும் அந்த சக்கரத்தை ஒரு கடலாக மாற்றி அந்த அரக்கன் மறைந்திருந்த குகைக்குள் பாயச் செய்தான். அந்த சக்கரத்தில் பகவான் நரசிம்ம அவதாரம்

எடுத்திருந்த பகவான் மகாவிஷ்ணு இருந்து கொண்டு அந்த குகைக்குள் இருந்த பிராண வாயு அனைத்தையும் தான் முழுங்கி விட மூச்சுச் திணறி இரத்தம் கக்கி குகைக்குள்ளேயே அந்த அரக்கன் மடிந்து போனான். ஆனாலும் பகவான் நரசிம்ம அவதாரத்தில் இருந்த பகவான் விஷ்ணுவின் கோபம் மறையவில்லை. ஆகவே அனைத்து தேவர்களும் அவரிடம் சென்று அமிருதத்தைக் கொடுக்க அதை உண்டவர் அமைதியானார். அங்கு அமர்ந்த அவர் தனக்கு அடுத்தடுத்து வரும் யுகங்களான திரேதாயுகத்தில் நெய்யும், துவாபரயுகத்தில் பாலும், கலியுகத்தில் பானகமும் தந்து வணங்கினால் மோட்சம் கிடைக்கும் என்று கூறினார்.

இராமாயண கால யுத்தம் முடிந்து வைகுண்டம் சென்ற பகவான் இராமபிரான் இங்கு வந்து பகவான் நரசிம்மரை ஆராதித்த பின்னர் திரும்பிச் செல்லும் முன், தன்னுடன் வந்த பகவான் அனுமானை அந்த ஷேத்திரத்தை பாதுகாக்கும் பணியில் இருக்குமாறு அறிவுறுத்த அவரும் அந்த மலை மீது தங்கி இருந்ததினால் பகவான் அனுமார் அங்கேயே கண்களுக்கு தெரியாமல் அமர்ந்து உள்ளதான ஒரு ஐதீகம் உள்ளது. இயற்கையில் அமைந்துள்ள குகை நுழை வாயிலில் அமைந்துள்ள அந்த ஆலய மூர்த்தி முகமின்றி குகை வாயில் போல காட்சி தந்ததினால் அதற்கு வாயை திறந்தபடி உள்ள விஷ்ணுவின் முகத்தைப் பொருத்தி அதனுள் பானகத்தை பிரசாதமாகப் படைக்கின்றனர். ஒரு அதிசயம் என்ன என்றால் அந்த தெய்வத்தின் வாயில் ஊற்றப்படும் நேவித்யமான பானகம் குடிக்கப்படுவது போல க்ளுக், க்ளுக் என்ற சப்தம் கேட்குமாம். . ஒரளவு பானகம் உள்ளே போனதும் மீதிப் பானகம் பிரசாதமாக

வெளியில் வழிந்து விட அதை பக்தர்கள் பிரசாதமாக கொண்டு செல்கின்றனர். மேலும் கீழே சிந்தும் வெல்லம் கலந்த அந்த பானக நீரை சுற்றியோ அல்லது தெய்வத்தின் வாயிலோ ஒரு சிறிய எறும்பு கூடக் கிடையாது என்பது அதிசயச் செய்தி!

# Lord Vishnu who drinks Jaggery Water

## Santhipriya



A divine with his mouth wide open is in a small hill in Mangalagiri which is a small town in between Vijayawada and

Guntur in Andhra Pradesh. The temple which is on a hilltop is called 'Panagala Narasimha Swamy' temple, a unique temple of its own. Here Lord Vishnu is in the invisible form of Lord Narasimha. The mouth is the only image of the god. Since the Lord enshrined here has no physical form, no eyes, no hands and no legs, only the mouth portion is covered with a brass metal replica of open mouth. Half the population of Mangalagiri has been weavers. While on the back side of the temple is the temple of Goddess Lakshmi Devi, one more Lord Lakshmi Narasimha Swamy Temple is located at the foot of the hill in which the deity made of stone can be seen depicted in the form of half an animal and half a god that reflects Lord Narasimha's incarnation. This deity has a garland made of 108 Saligramas which is considered to be a special feature not seen anywhere else. About 200 to 250 years ago a king who ruled Amravati, built a tower measuring 150 feet high for the temple. There is also a belief that Yudhishthira, the eldest of the Pandava, installed the prime deity in this temple which is said to have been built in the 18th century.

Once Goddess Mahalakshmi remained in penance on this hill thus making it a sacred place. Mangal means holy or auspicious and giri meant place. There is a folklore why this hill resembles to that of an elephant. One Hashva Sringi, born with body

deformities and son of a King named Pariyatra went on pilgrimage to get his form turned into normal human, reached Mangalagiri hill and performed penance seeking the grace of Lord Vishnu for 3 years. With the grace of the Lord when he regained normal human feature unwilling to go back, he transformed himself into that of an elephant looking hill to remain there to serve Lord Vishnu as his carrier vehicle. Hence this hill appears as an elephant.

Why the name of the temple was came to be called as Lord Narasimha Swami Temple. There is a legend on it. In Thretha Yuga an Asura (demon) called Namuchi, possessed rare boon from Lord Brahma, which protected him from getting killed by anything either dry or wet. Therefore he became ruthless and tortured everyone including Devas (Celestials) and saints. Unable to bear the brunt of his tortures, the celestials under the leadership of Lord Indira, took the support from Lord Vishnu to fight and finish him. Lord Vishnu gave them his Sudarshan Chakra to fight against him. Lord Indira converted the Sudarshan Chakra into that of ocean and ensured that it flowed into the cave where the Asura was hiding by shrinking himself into that of a small creature. Immediately Lord Vishnu entered into the Sudarshan Chakra and smoked out entire oxygen from inside the cave thus

suffocating the demon to death. Even after killing the asura, the anger of Lord Vishnu did not vane and he was in aggressive mood. The celestials and other divines went to him and gave him the nectar to drink which cooled him down. He blessed everyone saying that those who offered and worshipped him with Ghee in Thretha Yuga, Milk in Dwapara Yuga and in Kaliyuga the water mixed with Jaggery and cardamom, the mixer of which in local language was called Panama, they would reach heaven after death.

There is one more legend on the glory of this temple. Before Lord Rama went back to Vaikund, he came here to offer worship to Lord Narasimha. Before leaving, Lord Rama requested Lord Hanuman to remain the custodian of that temple and the hill and hence Lord Hanuman resides there in invisible form. The Lord Narasimha remained there with his mouth wide open to accept the water mixed with Jaggery and cardamom. Since it is believed that Lord Vishnu in the form of Lord Narasimha remains there with his mouth open to accept the offerings, the devotees have affixed a brass metal made head mask showing the mouth open. When the offering is poured into the mouth, one could hear feeble sound like gluck, gluck, as if the Lord was drinking the liquid. The excess Jaggery water flown out is received as prasad

(divine gift) by the devotees. It is astonishing to see that there are no traces of ants or flies in the temple and its vicinity as normally one would find in places where sugar related stuff gets spilled of stacked.